# 15

# தெய்வீகக் குணமாகுதல்

தெய்வீகக் குணமாகுதல் என்பது கருத்துவேறுபாடு நிறைந்த ஒரு கருப்பொருள் என்றாலும், அது வேதாகமத்தில் தெளிவில்லாமல் இருக்கும் ஒரு காரியமல்ல. உண்மையில் சுவிசேஷங்களில் எழுதப்பட்டுள்ளவைகளில் பத்திலொரு பகுதி இயேசுவானவரின் குணமாக்கும் ஊழியத்தைக் குறித்ததாகும். பழைய ஏற்பாட்டிலும், சுவிசேஷங்களிலும், புதிய ஏற்பாட்டிலும் குணமாக்குதல் குறித்த வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் வசனங்களின்மூலமாக நோய்வாய்ப்பட்டிருப்பவர்கள் அதிகமான ஆறுதலையும் ஊக்கத்தையும் பெற முடியும்.

உலகெங்கிலும் நான் கவனித்ததிலிருந்து அதிகமான ஒப்படைப்புக்கொண்ட விசுவாசிகளை [மெய்யான சீஷர்களை] கொண்டிருக்கும் சபைகளில் தெய்வீகக் குணமாக்குதல் அதிகமாக நடக்கிறது என்பதைக் கண்டிருக்கிறேன். சபை அனலுமின்றி, குளிருமின்றி வெதுவெதுப்பாக இருக்குமானால், அங்கே குணமாகுதல் மிகவும் அபூர்வமாகவே காணப்படுகிறது.[52] இதெல்லாம் நம்மை வியப்படையச் செய்யக் கூடாது. ஏனென்றால் விசுவாசிகளைத் தொடரும் அடையாளங்களில் ஒன்று அவர்கள் நோயாளிகளின்மீது கைகளை வைக்கும்போது அவர்கள் குணமாக்கப்படுவார்கள் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் [பார்க்க, மாற்கு 16:18]. விசுவாசிகளைத் தொடரும் அடையாளங்கள் என்று இயேசுவானவர் அறிவித்திருக்கும் அடையாளங்களை வைத்துப்

[52] வட அமெரிக்காவில் சில சபைகளில் விசுவாசிகள் என்று சொல்லிக்கொள்ளுபவர்கள் இதைக் குறித்துப் பிரசங்கிப்பதைக் கடுமையாக எதிர்க்கிறபடியால், ஒரு ஊழியர் அதிகத் துணிவோடுதான் இதைக் குறித்துப் போதிக்க வேண்டியிருக்கிறது. இயேசுவானவரும்கூடத் தமது குணமாக்கும் ஊழியத்துக்கு இடையூறாக எதிர்ப்பையும், அவநம்பிக்கையையும் சந்திக்க நேர்ந்தது [பார்க்க, மாற்கு 6:1–6].

பார்ப்போமானால், பல சபைகளில் ஒரு விசுவாசி கூட இல்லை என்ற முடிவுக்கே நாம் வர வேண்டியிருக்கும்.

> பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார் (மாற்கு 16:15–18).

கிறிஸ்துவின் பரிபூரணமான ஊழியத்தைப் பின்பற்றும் சீஷர்களை உருவாக்கும் ஊழியர், தனக்குச் செல்வாக்குள்ள வட்டத்துக்குள்ளாக, தெய்வீக குணமாக்குதல் ஊழியத்தை மேம்படுத்தத் தனது வரங்களைப் பயன்படுத்துவார். தெய்வீக குணமாகுதல் குறைந்தபட்சம் இரண்டு வழிகளில் தேவனுடைய ராஜ்யத்தின் விரிவாக்கத்துக்கு உதவுகிறது என்பதை அவர் அறிந்திருக்கிறார். முதலாவதாக, குணமாக்கும் அற்புதங்கள் சுவிசேஷத்துக்கு அற்புதமான விளம்பரமாக இருக்கின்றன. சுவிசேஷத்தையோ அல்லது நடபடிகளின் புத்தகத்தையோ வாசிக்கும் எந்தச் சிறுபிள்ளையும்கூட அதைப் புரிந்துகொள்ளும். (ஆனால் அதிகப்படியான பட்டங்களைப் பெற்றிருக்கும் ஊழியர் பலருக்கு இதைக் கிரகித்துக்கொள்ளுவது கடினமாக இருப்பதுபோலத் தோன்றுகிறது). இரண்டாவதாக, ஆரோக்கியமான விசுவாசிகள் தனிப்பட்ட சுகவீனத்தின் காரணமாக ஊழியத்தில் ஈடுபடுவது தடுக்கப்படுவதில்லை.

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் கிறிஸ்துவின் சரீரத்தில் தெய்வீகக் குணமாகுதலை வாஞ்சித்தாலும், அதைப் பெற்றுக்கொள்ளுவதில் சிரமத்தை அனுபவிக்கும் உறுப்பினர்களை உணர்ந்துகொள்ள வேண்டும். அவர்களுக்குப் பெரும்பாலும் மென்மையான போதனையும், சாந்தமான ஊக்கமும் அவசியமாகும். குறிப்பாக அவர்கள் குணமாகுதலுக்கு எதிரான சூழ்நிலையில் வளர்ந்திருப்பார்களானால் இது அவசியமாகும். சீஷர்களை உருவாக்கும் ஊழியர் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்: அவர் தெய்வீக குணமாகுதலைப் பற்றிப் போதிப்பதை முழுமையாகப் புறக்கணிக்கலாம். இதனால் ஒருவரையும் காயப்படுத்தாவிட்டாலும், குணமாக்குதல் நடைபெறாது. அல்லது,





ஒருசிலருக்கு அது விரோதமாக இருந்தாலும், மற்றவர்கள் குணமாகுதலை அனுபவிப்பதற்கு உதவியாக, அவர் தெய்வீக குணமாகுதலைக் குறித்து அன்போடு போதிக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் நான் இரண்டாவதையே தெரிந்துகொண்டிருக்கிறேன். ஏனென்றால் அது இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுகிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.

## சிலுவையில் குணமாக்குதல்

ஏசாயாவின் ஐம்பத்து மூன்றாம் அதிகாரமே தெய்வீகக் குணமாகுதலைக்குறித்த ஆய்வைத் துவங்குவதற்குச் சிறப்பான இடமாகும். இது மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனம் என்று எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் மூலமாக ஏசாயா இயேசுவின் பலி மரணத்தையும் சிலுவையில் அவர் செய்துமுடிக்கப் போகும் கிரியையையும் அப்படியே விவரிக்கிறார்:

> மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம் ; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் (ஏசாயா 53:4–6).

பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின் மூலமாக, இயேசுவானவர் நமது *பாடுகளையும் துக்கங்களையும்* சுமந்தார் என்று ஏசாயா அறிவித்திருக்கிறார். மூல எபிரெயத்தின் சரியான மொழிபெயர்ப்பு *வியாதியையும், வேதனையையும்* சுமந்தார் என்பதாகும். பல புதிய மொழிபெயர்ப்புகளில் இது அடிக்குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏசாயா 53:4 வசனத்தில் *பாடுகள்* என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் எபிரெயச் சொல் *சோலி* என்பதாகும். அது உபாகமம் 7:15; 28:61; 1 இராஜாக்கள் 17:17; 2 இராஜாக்கள் 1:2; 8:8; 2 நாளாகமம் 16:12; 21:15 என்ற வசனங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த இடங்களில் அது *வியாதி* என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

துக்கங்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெயச் சொல் *மாகோப்* என்பதாகும். அதை நாம் யோபு 14:22 மற்றும் யோபு 33:19 ஆகிய வசனங்களிலும் காணலாம். இந்த இரண்டு இடங்களிலும் அது

*நோவு* என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தச் சொல்லுக்கு வேதனை என்பதே அர்த்தமாகும்.

இது இப்படியிருக்கிறபடியால், ஏசாயா 53:4 வசனத்தை இப்படி மொழிபெயர்ப்பது மிகச் சரியாக இருக்கும்: ''மெய்யாகவே அவர் நம்முடைய வியாதிகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய வேதனைகளைச் சுமந்தார்.'' மத்தேயு சுவிசேஷத்தில் ஏசாயா 53:4 வசனத்தை மேற்கோளாக எடுத்துச் சொல்லும்போது இந்த உண்மை உறுதிப்படுத்தப்படுகிறது: ''அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்'' [மத். 8:17].

இந்த உண்மைகளிலிருந்து தப்ப முடியாத சிலர் ஏசாயா நமது ''ஆவிக்குரிய நோயைக்'' குறிப்பிடுகிறார் என்று நமக்கு உறுதிப்படுத்த முயலுகிறார்கள். என்றாலும், ஏசாயா 53:4 வசனத்தை மத்தேயு மேற்கோளாக எடுத்துச் சொல்லுவதை நாம் பார்க்கும்போது அது சரீரப்பிரகாரமான நோயையும் வியாதியையுமே குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. பின்னணியோடு சேர்ந்து இந்த வசனத்தைப் பார்ப்போம்:

> அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். *அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்* என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது [மத். 8:16–17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஏசாயா 53:4 வசனம் நிறைவேறும்படியாக இயேசுவானவர் சரீரப்பிரகாரமான குணமாகுதலைக் கொடுத்தார் என்று மத்தேயு தெளிவாகச் சொல்லியிருக்கிறார். எனவே ஏசாயா 53:4 வசனம் கிறிஸ்து நமது சரீரப்பிரகாரமான பெலவீனங்களையும், நோய்களையும் சுமக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது என்பதில் ஐயமில்லை.[53] இயேசுவானவர்

[53] எப்படியாவது தங்கள் அவநம்பிக்கையைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பற்காகச் சிலர் இயேசுவானவர் அன்று மாலை கப்பர்நகூமில் சிலரைக் குணமாக்கியபோது, அவர் ஏசாயா 53:4 வசனத்தை *முழுமையாக* நிறைவேற்றினார் என்று சொல்லுகிறார்கள். இயேசுவானவர் *நமது* அக்கிரமங்களுக்காக நொறுக்கப்பட்டதுபோல என்று ஏசாயா சொன்னதுபோல, அவர் *நமது* நோய்களையும் சுமந்தார் என்று ஏசாயா சொல்லியிருக்கிறார் [ஏசாயா 53:4, 5 வசனங்களை ஒப்பிடுங்கள்]. இயேசுவானவர் எத்தனை பேருடைய அக்கிரமங்களுக்காக நொறுக்கப்பட்டாரோ அதே அளவு மக்களுடைய நோய்களை அவர் சுமந்திருக்கிறார். எனவே கப்பர்நகூமில் இயேசுவானவரின் குணமாக்கும ஊழியம் ஏசாயா 53ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள மேசியா அவரே என்பதை உறுதிப்படுத்துவதை மத்தேயு சுட்டிக்காட்டுகிறார். அவர் நமது அக்கிரமங்களையும் நோய்களையும் இன்றும் சுமக்கிறவராக இருக்கிறார்.





நமது *அக்கிரமங்களைச்* சுமந்ததுபோல [பார்க்க, ஏசாயா 53:11] அவர் நமது *பலவீனங்களையும், நோய்களையும்* சுமந்தார் என்றும் வேதாகமம் சொல்லுகிறது. இது நோய்வாய்ப்பட்டிருக்கும் எவரையும் சந்தோஷமடையச் செய்யும் செய்தியாகும். தமது பாவநிவாரண பலியின் மூலமாக இயேசு நமக்கு இரட்சிப்பையும் *மற்றும்* குணமாகுதலையும் அருளியிருக்கிறார்.

## ஒரு கேள்வி கேட்கப்படுகிறது

இதுவே உண்மையாக இருக்குமானால், பிறகு ஏன் எல்லோரும் குணமாக்கப்படவில்லை என்று சிலர் கேட்கிறார்கள். மற்றொரு கேள்வியைக் கேட்பதின்மூலம் இந்தக் கேள்விக்குச் சிறப்பாகப் பதிலளிக்கலாம்: எல்லோரும் ஏன் மறுபடியும் பிறக்கவில்லை? எல்லோரும் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டிராதபடியாலோ அல்லது அதை விசுவாசியாதபடியாலோ மறுபடியும் பிறக்கவில்லை. இதைப் போலவே தனிப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் விசுவாசத்தின் மூலமாக மட்டுமே குணமாகுதலைப் பெற முடியும். பலர் இயேசுவானவர் தங்கள் நோய்களைச் சுமக்கிறார் என்ற அற்புதமான சத்தியத்தைக் கேள்விப்பட்டிருக்கவில்லை, மற்றவர்கள் அதைக் கேட்டும் அதைப் புறக்கணிக்கிறார்கள்.

நோயைக் குறித்த பிதாவாகிய தேவனின் மனோபாவம் அவருக்கு அன்பான குமாரனின் ஊழியத்தின்மூலமாகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இயேசுவானவர் இப்படிச் சாட்சியாகக் கூறியிருக்கிறார்:

> மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார் [யோவான் 5:19].

நாம் எபிரெய புத்தகத்தில், இயேசு ''அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருக்கிறார்'' என்று வாசிக்கிறோம் [எபி. 1:3]. வியாதியைக் குறித்த இயேசுவின் மனோபாவம், நோயைக் குறித்த அவருடைய பிதாவானவரின் மனோபாவத்தைப் போன்றதே என்பதில் ஐயமில்லை.

இயேசுவின் மனோபாவம் எப்படியிருந்தது? குணமாகுதலுக்காகத் தம்மிடம் வந்த *எவரையும், எந்தவொரு* சந்தர்ப்பத்திலும் திருப்பி அனுப்பியதில்லை. *ஒருமுறையாவது* அவர் குணமாகும்படி விரும்பிய நோய்வாய்ப்பட்ட ஒருவரிடமும் ''நீ குணமாகுவது தேவனுடைய சித்தமல்ல, அதனால் நீ நோயாளியாகவே இருக்க வேண்டும்'' என்று சொல்லவில்லை. தம்மிடம் வந்த நோயாளிகளை அவர் *எப்போதும்*

குணமாக்கினார். அவர்கள் குணமாக்கப்பட்டபிறகு, அவர்களுடைய விசுவாசமே அவர்களைக் குணமாக்கியது என்று அவர் சொன்னார். மேலும் தேவன் ஒருபோதும் மாறுவதில்லை என்று வேதாகமம் சொல்லுகிறது [பார்க்க, மல். 3:6]. இயேசுகிறிஸ்து ''நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' [எபி. 13:8].

## குணமாகுதல் அறிவிக்கப்பட்டுள்ளது

துரதிருஷ்டவசமாக, இன்று இரட்சிப்பு என்பது வெறும் பாவ மன்னிப்போடு முடிவடைந்துவிட்டதாகக் கருதப்படுகிறது. ''இரட்சிக்கப் படுவது'' ''இரட்சிப்பு'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்கச் சொற்கள் வெறும் மன்னிப்பை மட்டுமல்ல, முழுமையான விடுதலை யையும், குணமாகுதலையும் குறிக்கின்றன.[54] வேதாகமத்தில் இரட்சிப்பை முழுமையாக அனுபவித்த ஒருவனைப் பற்றி நாம் பார்ப்போம். அவன் தனது பட்டணத்தில் பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது அதைக் கேட்டு விசுவாசித்ததினால் குணமாக்கப்பட்டான்.

> இவர்கள் அதை அறிந்து, லிக்கவோனியா நாட்டிலுள்ள பட்டணங்களாகிய லீஸ்திராவுக்கும், தெர்பைக்கும் அவைகளின் சுற்றுப்புறங்களுக்கும் ஓடிப்போய்;அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார்கள். லீஸ்திரா விலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து, பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு: நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே, அவன் குதித்தெழுந்து நடந்தான் [அப். 14:6–10].

பவுல் ''சுவிசேஷத்தைப்'' பிரசங்கித்தாலும் அந்த மனுஷன் சரீரப்பிரகாரமான குணமாகுதலைப் பெறும் விசுவாசத்தைத் தனக்குள் உருவாக்கக்கூடிய ஏதோ ஒன்றைக் கேள்விப்பட்டிருக்கிறான். அவன்

[54] எடுத்துக்காட்டாக, இயேசுவானவர் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயைக் குணமாக்கியபோது அவளிடம் ''மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது'' என்று கூறினார் [மாற்கு 5:34]. இங்கே இரட்சித்தது என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சோஸோ என்ற சொல் எண்பதுக்கும் மேற்பட்ட முறை இப்படியே மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, எபேசியர் 2:5 வசனத்தில் ''கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருப்பதிலும், இதே சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படியாக ''இரட்சிக்கப்படுவது'' என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ள சொல்லில் சரீரப்பிரகாரமான குணமாகுதலும் சுட்டிக்காட்டப்படுகிறது என்பதை நாம் காண்கிறோம்.





இயேசுவின் குணமாக்கும் ஊழியத்தைக் குறித்துப் பவுல் சொல்லியதை, இயேசுவானவர் எப்படி குணமாகுதலுக்காக விசுவாசத்தோடு கேட்ட எல்லோரையும் குணமாக்கினார் என்பதைக் குறித்துச் சொல்லியதை, குறைந்தபட்சமாக அவன் கேட்டிருக்க வேண்டும். ஒருவேளை இயேசு நமது பலவீனங்களையும் நோய்களையும் சுமந்தார் என்று ஏசாயா சொல்லியிருப்பதை எடுத்துச் சொல்லியிருக்கலாம். நமக்குத் தெரியாது என்றாலும் ''விசுவாசம் கேள்வியினாலே வரும்'' என்கிறபடியால் [ரோமர் 10:17] உடல் ஊனமுற்ற அந்த மனிதன் தனக்குள் குணமாக வேண்டும் என்ற விசுவாசத்தைத் தூண்டிய எதையோ கேள்விப் பட்டிருக்க வேண்டும். பவுல் கூறிய ஏதோ காரியம் தேவன் தான் உடல் ஊனமுற்றவனாக இருப்பதை விரும்பவில்லை என்ற உறுதிப்பாட்டை அந்த மனிதனுக்குக் கொடுத்திருக்க வேண்டும்.

அந்த மனிதன் குணமாக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்று பவுல்தாமே விசுவாசித்திருக்க வேண்டும். அல்லது அவருடைய வார்த்தைகள் ஒருபோதும் குணமாகுதலுக்கான விசுவாசத்தைப் பெறும்படி அந்த மனிதனை உறுதிப்படுத்தியிருக்க முடியாது. அல்லது அந்த மனிதனை எழுந்து நிற்கும்படி அவர் கட்டளையிட்டிருக்க முடியாது. இப்போது பல நவீனப் பிரசங்கிமார்கள் சொல்லியிருப்பதைப் பவுலும் சொல்லியிருந்தால் என்ன நடந்திருக்கும்? அந்த மனிதன் குணமாகுதலுக்குத் தேவையான விசுவாசத்தைப் பெற்றிருக்க முடியாது. இன்று ஏன் பலர் குணமாக்கப் படவில்லை என்பதற்கு இதுவே சரியான விளக்கமாக இருக்க முடியும். குணமாகுதலுக்கான விசுவாசத்தைப் பெறும்படி மக்களைத் தூண்ட வேண்டிய மக்கள் உண்மையில் அவர்களுடைய விசுவாசத்தை அழித்துப் போடுகிறார்கள்.

மறுபடியுமாக, இந்த மனிதன் தன் *விசுவாசத்தினால்* குணமாக்கப் பட்டான் என்பதைக் கவனியுங்கள். அவன் விசுவாசித்திராவிட்டால் உடல் ஊனமுற்றவனாகவே இருந்திருப்பான். மேலும், அன்று அந்தக் கூட்டத்தில் நோயாளிகளான மற்றவர்களும் இருந்திருக்க வேண்டும். ஆனால் வேறு எவரும் குணமாக்கப்பட்டதாக எழுதப்பட்டிருக்க வில்லை. இது இப்படியிருக்குமானால், அவர்கள் ஏன் குணமாக்கப்பட வில்லை? அன்று அந்தக் கூட்டத்தில் இரட்சிக்கப்படாமலிருந்த பலர் மறுபடியும் பிறக்காமலிருந்த அதே காரணத்துக்காகத்தான் – அவர்கள் பவுலின் செய்தியை விசுவாசிக்கவில்லை.

சிலர் ஒருபோதும் குணமாக்கப்படவில்லை என்பதை அடிப்படை யாகக் கொண்டு நாம் எல்லோரையும் குணமாக்குவது தேவனுடைய சித்தம் அல்ல என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. ஒருசிலர் ஒருபோதும் மறுபடியும் பிறவாதவர்களாக இருக்கிறபடியால், எல்லோரும் மறுபடியும் பிறப்பது தேவனுடைய சித்தமல்ல என்று

முடிவுக்கு வருவதுபோல அது ஆகிவிடும். ஒவ்வொரு நபரும் தான் இரட்சிக்கப்பட வேண்டுமானால் தனிப்பட்ட முறையில் சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும். ஒவ்வொரு நபரும் குணமாக்கப்பட வேண்டு மானால் தனிப்பட்ட முறையில் அதை விசுவாசிக்க வேண்டும்.

## குணமாக்குவது தேவனுடைய சித்தம் என்பதற்கு மேலும் நிரூபணம்

பழைய உடன்படிக்கையின் அடிப்படையில் சரீரப்பிரகாரமான குணமாகுதல் தேவனோடுள்ள இஸ்ரவேலின் உடன்படிக்கையில் உள்ளடங்கியிருக்கிறது. யாத்திரை புறப்பட்டு சில நாட்களில் தேவன் இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்:

> நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார் (யாத். 15:26).

நேர்மையோடிருக்கும் எவரும் தேவனோடுள்ள இஸ்ரவேலின் உடன்படிக்கையில் குணமாகுதல் உள்ளடங்கியிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுவார்கள். இது மக்களின் கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்டதாகும். (1 கொரிந்தியர் 11:27–31 வசனங்களில் புதிய உடன்படிக்கையின் கீழும் சரீரப்பிரகாரமான குணமாகுதல் நமது கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்டது என்பதை உறுதிப்படுத்து கிறார்).

தேவன் இஸ்ரவேலருக்கு இப்படி வாக்குத்தத்தம் கொடுத்திருக் கிறார்:

> உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர் வதிப்பார், *வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்.* கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்ப தில்லை; உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன் (யாத். 23:25–26 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

> சகல ஜனங்களைப்பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப் பாய்; உங்களுக்குள்ளும் உங்கள் மிருக ஜீவன்களுக் குள்ளும் ஆணிலாகிலும் பெண்ணிலாகிலும் மலடிருப்ப தில்லை. *கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்*; உனக்குத் தெரிந்திருக்கிற எகிப்தியரின்





> கொடிய ரோகங்கள் ஒன்றும் உன்மேல் வரப் பண்ணாமல், உன்னைப் பகைக்கிற யாவர் மேலும் அவைகளை வரப்பண்ணுவார் (உபா. 7:14–15 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

சரீரப்பிரகாரமான குணமாகுதல் பழைய உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டிருக்குமானால், புதிய உடன்படிக்கையில் அது எப்படிச் சேர்க்கப்படாமலிருக்கும் என்று சிலர் வியப்படையலாம். உண்மையில் வேதவசனம் காட்டுகிறபடி புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கை யைவிடச் சிறப்பாக இருக்கிறது.

> இவரோ *விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு* எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார் (எபி. 8:6 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

## கூடுதலான நிரூபணங்கள்

எல்லோரையும் குணமாக்குவது தேவனுடைய சித்தம் என்பதற்கான மறுக்கமுடியாத நிரூபணத்தைப் பல வேத வசனங்கள் கொடுத்துள்ளன. அவைகளில் சிறப்பான மூன்று வசனங்களைப் பார்ப்போம்:

> என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, *உன் நோய் களையெல்லாம் குணமாக்கி*... (சங். 103:1–3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

தேவன் நமது எல்லா அக்கிரமங்களையும் மன்னிக்கச் சித்தமாயிருக்கிறார் என்ற தாவீதின் அறிக்கையை எந்தக் கிறிஸ்தவர் மறுக்க முடியும்? தேவன் நமது நோய்கள் எல்லாவற்றையும்கூடக் குணமாக்குவார் என்று தாவீது விசுவாசித்தான்.

> என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களைவிட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் *உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்* (நீதி. 4:20–22 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

> உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது *விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்;* கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும் [யாக். 5:14—15 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இந்தக் கடைசி வாக்குத்தத்தம் நோயோடிருக்கும் எல்லோருக்கும் உரித்தானது என்பதைக் கவனியுங்கள். மூப்பர்களோ அல்லது எண்ணெயோ குணமாகுதலைக் கொண்டுவரவில்லை, ''விசுவாசமுள்ள ஜெபமே'' குணமாகுதலைக் கொண்டுவருகிறது என்பதைக் கவனியுங்கள்.

இது மூப்பர்களின் விசுவாசமா அல்லது நோயாளியின் விசுவாசமா? இது இவர்கள் இருவருடைய விசுவாசமுமாகும். நோயாளியின் விசுவாசம் சபையின் மூப்பர்களை அழைத்தனுப்புவதில் ஒரு பகுதி வெளிப்படுத்தப்படுகிறது. நோயாளியின் அவநம்பிக்கை மூப்பரின் ஜெபத்தின் தாக்கத்தை ஒன்றுமில்லாததாக்கிவிடும். யாக்கோபு குறிப்பிடும் இந்த வகைப்பட்ட ஜெபம் இயேசுவானவர் மத்தேயு 18:19 வசனத்தில் குறிப்பிடும் ''ஒருமனப்பட்ட ஜெபத்துக்கு'' நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஜெபத்தில் ஈடுபட்டிருக்கும் இரு சாராரும் ''ஒருமனப்பட'' வேண்டும். ஒருவர் விசுவாசித்து, மற்றவர் விசுவாசிக்காவிட்டால் அவர்கள் ஒருமனப்பட்டிருக்கவில்லை என்றே அர்த்தமாகும்.

வேதாகமத்தின் பல பகுதிகளில் சாத்தானே நோய்க்குக் காரணம் என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம் [பார்க்க, யோபு 2:7; லூக்கா 13:16; அப். 10:38; 1 கொரி. 5:5]. எனவே தேவன் தமது பிள்ளைகளின் சரீரங்களில் சாத்தானின் கிரியையை எதிர்த்து நிற்பார் என்பதில் ஐயமில்லை. நமது பிதாவானவர் உலகத்திலுள்ள எந்தத் தகப்பனும் நம்மை நேசிப்பதைவிட, அதிகமாக நேசிக்கிறார் [பார்க்க, மத். 7:11]. தனது பிள்ளைகள் நோய்வாய்ப்பட வேண்டும் என்று நினைக்கும் ஒரு தகப்பனை நான் இதுவரையில் சந்திக்கவில்லை.

இயேசுவானவர் உலகத்தில் ஊழியம்செய்தபோது அவரால் செய்யப்பட்ட ஒவ்வொரு குணமாகுதலும், நடபடிகளின் புத்தகத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குணமாகுதலும், நாம் ஆரோக்கிய மானவர்களாக இருக்க வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார் என்று விசுவாசிக்கும்படி நம்மை ஊக்குவிக்க வேண்டும். இயேசுவானவர் குணமாகுதலுக்காகத் தம்மை நாடிவந்தவர்களைக் குணமாக்கினார்; அவர்களுடைய விசுவாசமே இதற்குக் காரணம் என்பதைத் தெளிவு





படுத்தினார். இயேசுவானவர் குணமாக்கியபோது அவர் தனிப்பட்ட ஒரு சாராரைத் தெரிந்துகொள்ளவில்லை என்பதை இது உறுதிப்படுத்துகிறது. நோய்வாய்ப்பட்ட எவரும் விசுவாசத்தோடு அவரிடம் வந்து குணமாகுதலைப் பெறலாம். அவர்கள் எல்லோரையும் அவர் குணமாக்க விரும்பினாலும், அவர்கள் விசுவாசம் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார்.

## சில பொதுவான எதிர்ப்புகளுக்குப் பதில்கள்

இதற்கு எதிரான மிகவும் பொதுவான எதிர்ப்பு வேத வசனங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை, மக்களின் அனுபவங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ''எனக்கு ஒரு அற்புதமான கிறிஸ்தவப் பெண்மணியைத் தெரியும். அவள் புற்று நோயிலிருந்து குணமாக வேண்டுமென்று ஜெபித்தாள். ஆனால் அவள் மரித்துப்போனாள். எனவே எல்லோரையும் குணமாக்குவது தேவனுடைய சித்தமல்ல என்பதை இது நிரூபிக்கிறது'' என்று சொல்லுகிறார்கள்.

தேவனுடைய வார்த்தையேயல்லாமல் நாம் வேறு எதைக் கொண்டும், எப்போதும் தேவனுடைய சித்தத்தைத் தீர்மானிக்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, நீங்கள் காலத்தில் பின்னோக்கிச் சென்று பாலும் தேனும் ஓடும் வாக்குப்பண்ணப்பட்ட தேசம் அவர்களுக்காக யோர்தான் நதிக்கு அப்பால் காத்திருக்கும் வேளையில், இஸ்ரவேல் மக்கள் நாற்பது வருடங்களாக வனாந்தரத்தில் அலைந்து திரிவதைப் பார்த்திருப்பீர்களானால், இஸ்ரவேலர் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்துக்குள் பிரவேசிப்பது தேவனுடைய சித்தம் அல்ல என்ற முடிவுக்கே வந்திருப்பீர்கள். ஆனால் வேதாகமத்தை வாசிப்பீர்களானால், காரியம் அப்படியிருக்கவில்லை என்பதைக் கண்டுகொள்ளுவீர்கள். இஸ்ரவேலர் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்துக்குள் பிரவேசிப்பது நிச்சயமாகத் தேவனுடைய சித்தமாக *இருந்தது*. ஆனால் அவர்களுடைய அவநம்பிக்கையின் காரணமாகவே அவர்களால் பிரவேசிக்க முடியாமல் போய்விட்டது [பார்க்க, எபி. 3:19].

இப்போது நரகத்தில் இருக்கும் எல்லா மனிதர்களையும் குறித்து என்ன? அவர்கள் பரலோகத்தில் இருப்பதே தேவனுடைய சித்தமாக இருந்தது. ஆனால் அவர்கள் மனந்திரும்புதல், ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்தல் ஆகிய நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை. எனவே, நாமும் நோயாளிகளைப் பார்த்து, குணமாக்குதல் குறித்த தேவனுடைய சித்தத்தைத் தீர்மானிக்க முடியாது. ஒரு கிறிஸ்தவர் குணமாகுதலுக்காக ஜெபித்து அதில் தோற்றுப்போனார் என்பதற்காக எல்லோரையும் குணமாக்குவது தேவனுடைய சித்தம் அல்ல என்று சொல்லிவிட முடியாது. அந்தக் கிறிஸ்தவர் தேவனுடைய

நிபந்தனைகளை நிறைவேற்றியிருந்தால், அவர் குணமாகியிருப்பார். இல்லாவிட்டால் தேவன் பொய்யர் என்று ஆகிவிடுமே? நாம் குணமாகுதலைப் பெறத் தவறி, குணமாகுதல் தேவனுடைய சித்தமல்ல என்ற சாக்குப் போக்கின் மூலம் தேவனைக் குற்றப்படுத்துவோமானால், வனாந்தரத்தில் மரித்த அவநம்பிக்கைகொண்ட இஸ்ரவேலருக்கும் உங்களுக்கும் வித்தியாசம் எதுவுமில்லை. அவர்கள் வாக்குப்பண்ணப் பட்ட தேசத்துக்குள் தாங்கள் பிரவேசிப்பது தேவனுடைய சித்தமல்ல என்று சொன்னார்கள். நமது தற்பெருமையை அடக்கிவைத்து, நமது குற்றத்தை நாம் ஒப்புக்கொள்ளுவோமாக!

விசுவாசத்தைப் பற்றிய முந்தைய அத்தியாயத்தில் நான் சொன்னதுபோல, பல உண்மையுள்ள கிறிஸ்தவர்களும்கூட விசுவாசத்தை அழித்துப்போடும் சொற்களான ''உமது சித்தத்தின்படி ஆகக்கடவது'' என்ற சொற்களோடு குணமாகுதல் குறித்த தங்கள் ஜெபத்தைத் தவறாக முடிக்கிறார்கள். இது அவர்கள் விசுவாசத்தில் ஜெபிக்கவில்லை என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஏனென்றால் தேவனுடைய சித்தத்தைக் குறித்த நிச்சயம் அவர்களுக்கு இல்லை. குணமாகுதலைப் பொருத்தவரையில், நாம் ஏற்கெனவே பார்த்தபடி தேவனுடைய சித்தம் தெளிவாக இருக்கிறது. தேவன் உங்களைக் குணமாக்க விரும்புகிறார் என்பதை நீங்கள் அறிவீர்களானால், ''உம்முடைய சித்தப்படி ஆகக்கடவது'' என்று குணமாகுதல் குறித்த உங்கள் ஜெபத்தோடு சேர்ப்பதற்குத் தேவை யிருக்காது. அது ஆண்டவரிடம் ''ஆண்டவரே, என்னைக் குணமாக்கு வதாக நீர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறீர் என்பதை நான் அறிவேன். ஆனால் ஒருவேளை நீர் அதைக் குறித்துப் பொய் சொல்லியிருப் பீரானால், உண்மையில் அது உமக்குச் சித்தமாக இருந்தால் மட்டுமே என்னைக் குணமாக்கும்படி உம்மிடம் வேண்டிக்கொள்ளுகிறேன்'' என்று ஜெபிப்பதற்கு ஒப்பாக இருக்கிறது.

கீழ்ப்படியாத விசுவாசிகளைச் சிட்சிக்கும்படி தேவன் நோய்களை அனுமதிக்கிறார், சில வேளைகளில் அவர்கள் அகாலமரணம் அடையும் படியும் செய்கிறார் என்பது உண்மைதான். அப்படிப்பட்ட விசுவாசிகள் குணமாகுதலைப் பெறுவதற்கு முன்பாக மனந்திரும்புவது அவசிய மாகும் (பார்க்க, 1 கொரி. 11:27–32). தங்கள் சரீரத்தைச் சரியாகக் கவனிப்பதைப் புறக்கணிப்பதின்மூலமாகவும் சிலர் நோய்வாய்ப்படு கிறார்கள். கிறிஸ்தவர்கள் ஒரு ஆரோக்கியமான சரிவிகித உணவை உட்கொண்டு, ஒழுங்காக உடற்பயிற்சிசெய்து, தேவையான ஓய்வை எடுத்துக்கொண்டு புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும்.

### இரண்டாவது பொதுவான எதிர்ப்பு

''பவுலுக்கு ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது, ஆனாலும் தேவன் அதைக் குணமாக்கவில்லை'' என்று அடிக்கடி சொல்லப்படுகிறது.





பவுலுக்குக் கொடுக்கப்பட்டிருந்த முள் ஒரு சரீரப்பிரகாரமான நோய் என்று சொல்லுவது மோசமான இறையியல் கொள்கையாகும். ஏனென்றால் அந்த முள் என்ன என்பதைப் பவுல்தானே சொல்லியிருக் கிறார் – அது சாத்தானின் தூதனாக இருக்கிறது

> அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவை களுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாத படிக்கு, அது என்னைக் குட்டும் *சாத்தானுடைய தூதனாயிருக்கிறது*. அது என்னைவிட்டு நீங்கும் படிக்கு நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன் (2 கொரி. 12:7–9 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

*தூதன்* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல் ''அக்கிலோஸ்'' என்பதாகும். அது புதிய ஏற்பாட்டில் 160க்கும் மேற்பட்ட இடங்களில் தூதன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுலுக்கு மாம்சத்தில் கொடுக்கப்பட்ட முள் அவரைக் குட்டும் சாத்தானின் தூதனாவான். அது ஒரு நோயோ அல்லது வியாதியோ அல்ல.

பவுல் குணமாகும்படி ஜெபித்ததாகவோ அல்லது தேவன் அவரைக் குணமாக்க மறுத்ததாகவோ எந்தக் குறிப்பும் இல்லை என்பதைக் கவனியுங்கள். மூன்று முறை பவுல் தன்னைக் குட்டும் தூதனை அகற்றும்படி தேவனிடம் வேண்டிக்கொண்டார். ஆனால் தமது கிருபை போதுமானது என்று தேவன் பதிலளித்தார்.

பவுலுக்கு இந்த முள்ளைக்கொடுத்தது யார்? ''சாத்தானுடைய தூதன்'' என்கிறபடியால், சாத்தானே இந்த முள்ளைக் கொடுத்தான் என்று சிலர் சொல்லுகிறார்கள். பவுல் பெருமையில் தன்னை உயர்த்திக் கொள்ளக் கூடாது என்று அந்த முள் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், தேவனால் அது கொடுக்கப்பட்டிருக்கும் என்று மற்றவர்கள் சொல்லு கிறார்கள். ''என்னை நான் உயர்த்தாதபடிக்கு'' என்று பவுல்தாமே சொல்லியிருக்கிறார்.

கிங் ஜேம்ஸ் ஆங்கில மொழிபெயர்ப்பில் ''அளவுக்கு மிஞ்சி என்னை உயர்த்தாதபடிக்கு'' என்று அர்த்தம்கொள்ளும்படி மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது ஒரு மிக முக்கியமான வேறுபாடாகும்.

ஏனென்றால் நாம் உயர்த்தப்படுவதைத் தேவன் எதிர்க்கவில்லை. உண்மையில் நம்மை நாமே தாழ்த்துவோமானால் நம்மை உயர்த்துவதாக தேவன் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார். எனவே தேவனே பவுலை உயர்த்துகிறவராக இருக்க வேண்டும். சாத்தானோ பவுல் பயணமாகச் செல்லும் இடங்களிலெல்லாம் அவர் உயர்த்தப்படாத படிக்கு, அவரைக் குட்டும்படிக்கு ஒது தூதனை அனுப்பிக்கொண்டிருந்தான். என்றாலும், பவுலின் பலவீனத்தின் காரணமாகத் தமது வல்லமை அவருடைய வாழ்க்கையில் இன்னுமதிகமாக வெளிப்படுத்தப்படும் என்கிறபடியால், தாம் இந்தச் சூழ்நிலைகளைத் தமது மகிமைக்காகப் பயன்படுத்துவதாகத் தேவன் சொல்லியிருக்கிறார்.

பவுலை நோய் தாக்கியிருந்தது என்றும் தேவன் அவரைக் குணமாக்க மறுத்தார் என்றும் சொல்லுவது வேதாகமம் உண்மையில் சொல்லுவதைப் பயங்கரமாகத் திரித்துக்கூறுவதாகும். மாம்சத்தில் முள்ளைக் குறித்த இந்தப் பகுதியில் பவுல் எந்த நோயைக் குறித்தும் குறிப்பிடவில்லை. இந்த நோயைத் தேவன் குணமாக்க மறுத்ததாகவும் எந்தக் குறிப்பும் இல்லை. நேர்மையுள்ள ஒருவர் பவுல் தான் சந்தித்த சோதனைகளைக் குறித்து 2 கொரிந்தியர் 11:23–30 வசனங்களில் கூறியிருப்பவைகளை வாசிப்பாரானால், அவர் நோயைக் குறித்து ஒருமுறைகூடக் குறிப்பிடவில்லை என்பதைக் கண்டுகொள்ளலாம்.

### இதே கருப்பொருளின் விரிவாக்கம்

சிலர் பவுலின் முள்ளைக் குறித்த எனது விளக்கத்துக்கு ''ஆனால் கலாத்தியருக்குத் தான் முதன்முதலில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த போது தான் நோய்வாய்ப்பட்டிருப்பதாகப் பவுல் சொல்லவில்லையா? இது அவருடைய மாம்சத்தில் முள்ளைக் குறிக்கவில்லையா?'' என்று கேட்கிறார்கள்.

பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் என்ன எழுதியிருக்கிறார் என்பதைப் பார்ப்போம்:

> உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறேன். அப்படியிருந்தும், என் சரீரத்தில் உண்டாயிருக்கிற சோதனையை நீங்கள் அசட்டைபண்ணாமலும், அரோசியாமலும், தேவ தூதனைப்போலவும், கிறிஸ்து இயேசுவைப்போலவும், என்னை ஏற்றுக் கொண்டீர்கள் [கலா. 4:13–14].

இங்கே *பலவீனம்* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல் *அஸ்தெனியா* என்பதாகும். இதற்குப் ''பலவீனம்'' என்பது சரியான மொழிபெயர்ப்பாகும். அது நோயினால் வந்த பலவீனமாக இருக்கலாம் என்றாலும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்பதில்லை.





எடுத்துக்காட்டாக, பவுல் ''தேவனுடைய *பலவீனம்* என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது'' என்று எழுதியிருக்கிறார் [1 கொரி. 1:25 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. இங்கேயும் *அஸ்தெனியா* என்ற சொல் *பலவீனம்* என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பாளர்கள் இதை ''தேவனுடைய நோய் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது'' என்று மொழிபெயர்த்திருந்தால் அது அர்த்தமில்லாததாக இருக்கும். [மேலும், மத்தேயு 26:41. 1 பேதுரு 3:7 வசனங்களையும் பாருங்கள். அங்கேயும் *அஸ்தெனியா* என்ற சொல்லுக்கு *பலவீனம்* என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதை *நோய்* என்று மொழிபெயர்க்க முடியாது].

நடபடிகளின் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி, பவுல் முதலில் கலாத்தியாவுக்குச் சென்றபோது, அவர் நோய்வாய்ப்பட்டதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. என்றாலும், அவர் கல்லெறிபட்டு, மரித்துப் போனார் என்று நினைத்து விடப்பட்டார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருந்திருக்க வேண்டும் அல்லது அற்புதவிதமாகப் பிழைத்திருக்க வேண்டும் [பார்க்க, அப். 14:5–7, 19–20]. பவுல் கல்லெறிபட்டு, மரித்துப்போனவர் என்று விடப்பட்டிருந்தபடியால், அவருடைய சரீரம் காயங்களும், சிறாய்ப்புகளும் நிறைந்து பலவீனமான நிலையிலேயே இருக்க வேண்டும்.

பவுல் அவருக்குச் செவிகொடுத்தவர்களுக்குச் சோதனையாக இருக்கும் வகையில் நோய்வாய்ப்பட்டிருக்கவில்லை. மாறாக, அவர் சமீபத்தில்தான் கல்லெறிபட்டிருந்தபடியால் அவருடைய சரீரம் பலவீனமாக இருந்தது. அவர் கலாத்தியருக்கு நிருபத்தை எழுதும்போதும் அவர் கலாத்தியாவில் அனுபவித்த துன்பறுத்தல்களின் அடையாளங்கள் அவருடைய சரீரத்தில் இருந்திருக்க வேண்டும். எனவேதான் அவர் இப்படி எழுதியிருக்கிறார்:

> இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன் [கலா. 6:17].

### மற்றொரு எதிர்ப்பு: ''நான் தேவனுடைய மகிமைக்காகத் துன்பப்படுகிறேன்''

இது சிலர் பயன்படுத்தும் எதிர்ப்பாகும். தாங்கள் தேவனுடைய மகிமைக்காகத் துன்பப்படுவதாகச் சொல்லிக் கொள்ளுவதற்கு அடிப்படையாக லாசரு குணமாக்கப்படும் நிகழ்ச்சியிலிருந்து ஒரு வசனத்தை எடுத்துப் பயன்படுத்துகிறார்கள். லாசருவைக் குறித்து இயேசுவானவர் இப்படிச் சொன்னார்:

> இயேசு அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார் [யோவான் 11:4].

லாசருவின் நோயின் காரணமாக தேவன் மகிமைப்படுவார் என்று இயேசுவானவர் சொல்லவில்லை. அவன் குணமாக்கப்பட்டு, மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவதினால் தேவன் மகிமைப்படுவார் என்றுதான் கூறினார். அதாவது, அந்த நோயின் இறுதி முடிவு மரணமாக இருக்காது, தேவன் மகிமைப்படுவதாக இருக்கும். தேவன் நோயில் மகிமைப்படுத்தப்படுவதில்லை, அவர் குணமாகுதலில் மகிமைப்படுத்தப் படுகிறார் [மேலும் பார்க்க, மத். 9:8; 15:31; லூக்கா 7:16; 13:13; 17:15 இங்கெல்லாம் குணமாகுதல் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வந்தது].

### மற்றொரு எதிர்ப்பு: ''துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டுவந்தேன்'' என்று பவுல் சொல்லுகிறார்

நான் இந்த வாக்கியத்தை ஜெர்மனியிலுள்ள ஒரு பட்டணத்தில் வைத்து எழுதிக்கொண்டிருக்கிறேன். கடந்த வாரம் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள எனது சொந்த ஊரைவிட்டு நான் புறப்பட்டபோது, எனக்குப் பின்னால் எண்ணற்ற நோயாளிகளை விட்டு வந்திருக்கிறேன். நோயாளிகள் நிறைந்த *மருத்துவமனைகளை* நான் விட்டுவந்திருக் கிறேன். இதனால், அவர்கள் எல்லோரும் குணமாகுவது தேவனுடைய சித்தம் அல்ல என்று அர்த்தமாகிவிடாது. பவுல் தான் சென்ற ஒரு பட்டணத்தில் ஒருவனை நோயாளியாக விட்டுவந்தார் என்பதற்காக அவன் குணமாகுவது தேவனுடைய சித்தமல்ல என்று ஆகிவிடாது. பவுல் பின்னால் விட்டுவந்த எண்ணற்ற இரட்சிக்கப்படாத மக்களைக்குறித்து என்ன? அவர்கள் இரட்சிக்கப்படுவது தேவனுடைய சித்தமல்ல என்பதை இது நிரூபிக்கிறதா? நிச்சயமாக இல்லை.

### மற்றொரு எதிர்ப்பு: ''நான் யோபுவைப்போல இருக்கிறேன்!''

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நீங்கள் யோபுவின் வாழ்க்கையின் இறுதியைப் பார்ப்பீர்களானால் அவன் குணமாக்கப்பட்டான் என்பதை அறிவீர்கள். யோபு நோயாளியாகவே இருப்பது தேவனுடைய சித்தமல்ல. நீங்கள் நோயாளியாக இருப்பதும் தேவனுடைய சித்தமல்ல. குணமாக்கு தலே தேவனுடைய சித்தம் என்பதை யோபுவின் வரலாறு மறுபடியுமாக உறுதிப்படுத்துகிறது.





### மற்றொரு எதிர்ப்பு: தீமோத்தேயுவின் வயிற்றைக் குறித்து பவுல் அவனுக்குக் கொடுத்த ஆலோசனை

''நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற் காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்'' என்று பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை கூறியதை நாம் அறிவோம் [1 தீமோ. 5:23].

உண்மையில் பவுல் தீமோத்தேயுவிடம் அவன் தனது வயிற்றிற் காகவும், அவனுக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும் *தண்ணீரைக் குடிப்பதை நிறுத்திவிட்டு*, கொஞ்சம் திராட்சரசம் கூட்டிக் கொள் என்றே ஆலோசனை கொடுக்கிறார். அந்தத் தண்ணீரில் ஏதோ தீங்கு இருக்கிறது என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. நீங்கள் சுத்தமில்லாத நீரைக் குடித்து வருவீர்களானால், அதை நிறுத்திவிட்டு, வேறு எதையாவது குடிக்கத் துவங்க வேண்டும். அல்லது தீமோத்தேயு வைப்போல உங்களுக்கும் வயிற்றில் பிரச்சினைகள் வரலாம்.

### மற்றொரு எதிர்ப்பு: ''இயேசு தமது தெய்வத்துவத்தை நிரூபிப்பதற்காக மட்டுமே குணமாக்கினார்''

இயேசுவானவர் குணமாக்கியதற்கு ஒரே காரணம் அவருடைய தெய்வத்துவத்தை நிரூபிப்பதற்காக மட்டுமே என்று நம்மை நம்பச் செய்யச் சிலர் முயலுகிறார்கள். இப்போது அவருடைய தெய்வத்துவம் உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறபடியால், அவர் குணமாக்குவது கிடையாது என்று சொல்லுகிறார்கள்.

இது முற்றிலும் தவறானதாகும். இயேசு செய்த அற்புதங்கள் அவருடைய தெய்வத்துவத்தை உறுதிப்படுத்தின என்பது உண்மைதான். ஆனால் அதற்காக மட்டுமே அவர் தமது உலக ஊழியத்தில் மக்களைக் குணமாக்கவில்லை. பலமுறை தாம் குணமாக்கியவர்களிடம் தம்மைக் குறித்த மற்றவர்களிடம் எதுவும் சொல்ல வேண்டாம் என்று அவர் தடுத்திருக்கிறார் [பார்க்க, மத். 8:4; 9:6, 30; 12:13–16; மாற்கு 5:43; 7:36; 8:26]. இயேசுவானவர் தமது தெய்வத்துவத்தை நிரூபிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக மக்களுக்குக் குணமளித்திருப்பார் என்றால், தாமே இதை அவர்களுக்குச் செய்ததாக எல்லோரிடமும் போய்ச் சொல்லுங்கள் என்றல்லவா அவர் இவர்களிடம் சொல்லியிருப்பார்?

இயேசுவானவரின் குணமாக்குதலுக்குப் பின்னால் அவரைத் தூண்டியது எது? பலமுறை வேதாகமத்தில் அவர் ''மனதுருகி'' அவர் களைக் குணமாக்கினார் என்று நாம் வாசிக்கிறோம் [பார்க்க, மத். 9:35–36; 14:14; 20:34; மாற்கு 1:41; 5:19; லூக்கா 7:13]. இயேசுவானவர் மனதுருக்கத்தோடு மக்களை நேசித்தபடியினால்தான் அவர்களைக் குணமாக்கினார். அவர் தமது உலக ஊழியத்தை முடித்துவிட்ட பிறகு

மனதுருக்கத்தில் குறைந்தவராக ஆகிவிட்டாரா? அவருடைய அன்பு குறைந்து போயிருக்கிறதா? நிச்சயமாக இல்லை!

### மற்றொரு எதிர்ப்பு: ''ஏதோ காரணத்துக்காக நான் நோயாளியாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்''

நாம் இதுவரை பார்த்த வேதவசனங்களிலிருந்து இது முடியாத காரியம் என்பதை அறிகிறோம். நீங்கள் தொடர்ந்து கீழ்ப்படியாமையில் இருப்பீர்களானால், உங்களை மனந்திரும்பும்படி செய்வதற்காக தேவன் தொடர்ந்து உங்களை நோயாளியாக விட்டிருக்கலாம். என்றாலும் நீங்கள் நோயாளியாகவே இருப்பது அவருடைய சித்தமல்ல. நீங்கள் மனந்திரும்பி, குணமாக வேண்டுமென்றே அவர் விரும்புகிறார்.

மேலும், நீங்கள் நோயாளியாகவே இருக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாக இருக்குமானால், நீங்கள் ஏன் மருத்துவரிடம் சென்று, குணமாக வேண்டும் என்ற நோக்கத்தோடு மருந்துகளை உட்கொள்ளுகிறீர்கள்? நீங்கள் ''தேவனுடைய சித்தத்துக்கு'' விரோதமாகச் செயல்படவில்லையா?

### இறுதியான எதிர்ப்பு: ''நாம் நோய்வாய்ப்படாவிட்டால், பிறகு எப்படி மரிப்போம்?''

நமது பொருள்ரீதியான சரீரம் அழிந்துகொண்டிருக்கிறது என்று வேதாகமம் போதிப்பதை நாம் அறிவோம் (பார்க்க, 2 கொரி. 4:16). நமது தலைமயிர் வெள்ளையாவதையோ, நமது உடல் முதுமையடைவதையோ நம்மால் தடுக்க முடியாது. நாம் இளவயதில் இருந்ததுபோல இப்போது அதே தெளிவான பார்வையோடும், கேட்கும் சக்தியோடும் முதிர்வயதில் இருப்பதில்லை. நம்மால் வேகமாக ஓட முடியாது. நமது இருதயம் உறுதியானதாக இல்லை. நாம் மெதுவாக அழிந்துகொண்டிருக்கிறோம்.

ஆனால் நாம் இதற்காக நோயினால் மரிக்க வேண்டும் என்பதில்லை. நமது சரீரம் முற்றிலுமாகத் தளர்ந்து போகும். அப்படிப்பட்ட வேளையில் தேவன் நம்மைப் பரலோகத்துக்கு அழைக்க, நமது ஆவி சரீரத்தை விட்டுவிட்டு அங்கே செல்லும். பல விசுவாசிகள் இப்படி மரித்திருக்கிறார்கள். ஏன் நீங்களும் அப்படி மரிக்கக் கூடாது?



## 16

# இயேசுவின் குணமாக்கும் ஊழியம்

இயேசுவானவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறபடியால், அவர் தாம் விரும்பிய எந்த வேளையிலும் அற்புதத்தைச் செய்யலாம், எவரையும் குணமாக்கலாம் என்று பெரும்பாலும் நினைக்கிறார்கள். ஆனால் நாம் வேதவசனங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, இயேசுவானவர் தெய்வீகமானவராக இருந்தாலும், அவர் தமது உலக ஊழியத்தில் கட்டுப்படுத்தப்பட்டவராக இருந்தார் என்பதை நாம் அறிகிறோம். ''பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்'' என்று அவர் ஒருமுறை சொல்லியிருக்கிறார் (யோவான் 5:19). இயேசுவானவர் கட்டுப்படுத்தப்பட்டவராகத் தமது பிதாவானவரைச் சார்ந்திருந்தார் என்பதை இது காட்டுகிறது.

பவுலைப் பொருத்தவரையில், இயேசுவானவர் மானிடனானபோது தேவனாகத் தாம் முன்பு வைத்திருந்த சில காரியங்களைவிட்டுத் ''தம்மை வெறுமையாக்கினார்'' என்று சொல்லியிருக்கிறார்.

> கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், *தம்மைத்தாமே வெறுமையாக்கி*, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலி. 2:5–7 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

அவர் எவைகளிலிருந்து ''தம்மைத்தாமே வெறுமையக்கினார்''? அது அவருடைய தெய்வத்துவம் அல்ல. அது அவருடைய பரிசுத்தம் அல்ல. அது அவருடைய அன்பும் அல்ல. அது அவருடைய இயல்புக்கு அப்பாற்பட்ட வல்லமையாகவே இருக்க வேண்டும். அவர் இனிமேலும்